(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 14(3).]

# பாராளுமன்றம்

## 14 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 யூன் 05 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 யூன் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4788/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஆண்டொன்றில் சிறு போகம், பெரும் போகம் ஆகிய இரு போகங்களிலும் பயிரிடுவதற்கு தேவைப்படும் விதை நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதை நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தேவைப்படும் விதை நெல்லை உற்பத்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) விதை உற்பத்தியை பெருக்குவதற்கு விதைக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5575/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது அமுலிலுள்ள ஆயுர்வேத சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி சட்டம் திருத்தப்பட்டுள்ள தவணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இது இறுதியாக திருத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iv) இற்றைவரை இச்சட்டம் திருத்தப்படவில்லையெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகள், மருத்துவ உத்தியோகத்தர் என்ற பெயரிலா இன்றேல் மருத்துவ நிபுணர்கள் என்ற பெயரிலா அழைக்கப்படுகின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்களை இப்பெயரில் அழைப்பதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5708/ '14

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2011 தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் மொனறாகலை மாவட்டத்தினுள் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் வீடமைப்பு வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிட்ட பணத்தொகை பெறப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கு எழுத்துமூல வாக்குறுதியொன்று வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வாக்குறுதியின்படி இற்றைவரை வீடுகள் கிடைக்காதுள்ள குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5931/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மாத்தறை மாவட்ட மக்களுக்கு வழங்கிய வீடுகளுக்கு தற்போது உறுதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அத்தகைய உறுதிகள் வழங்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில் கந்தகொடல்ல (H.H.O. வீடுகள்), அபிமன்புர மற்றும் திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், மெதவத்த (லுனுகளப்புவ) முதியன்சேவத்த மற்றும் மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் கால்லகே வத்த, துடாவ, கொடிகார கட்டிடம் மற்றும் லொரண்ட் சிட்டி ஆகிய இடங்களில் வழங்கப்பட்டுள்ள வீடுகளுக்கு சுயாதீனமான ஆதனங்களாக அல்லது தனி வீடுகளாக உறுதிகளை வழங்க முடியுமென தேசிய வீடமைப்பு அதிகாரசபை சிபாரிசு செய்துள்ளதா என்பதையும்;

(iv) அந்த வீடுகளுக்கு உறுதிகளை வழங்கும் கடமையை கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு வழங்குவதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) கூட்டாட்சி ஆதனங்கள் என்ற அடிப்படையில் அல்லது தனி வீட்டுரிமை என்ற அடிப்படையில் மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட வீடுகளைப் பெற்றவர்களுக்கு உறுதிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5939/ '15

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கௌரவ உயர் நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்தன அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஆயுத கடத்தல் பற்றி விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினால் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்வறிக்கை வெளியிடப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனின், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6034/ '15

கௌரவ விஜித ஹேரத்,—சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) ஹோமியோபதி சட்டத்தின் பிரகாரம் 2006-2011 வரையான காலப் பகுதிக்காக நியமிக்கப்பட்டிருந்த ஹோமியோபதி மருத்துவப் பேரவையானது அரசியலமைப்பின் 12 மற்றும் 14 ஆம் உறுப்புரைகளுக்கு முரணாக 2009.10.29. ஆம் திகதி கலைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அதன் காரணமாக 2006 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட மருத்துவப் பேரவை அங்கத்தவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவென்பதையும்;

(iii) கலைக்கப்பட்ட மருத்துவப் பேரவைக்குப் பதிலாக அப்போதைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் சட்டபூர்வமற்ற இடைக்கால குழுவொன்று நியமிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத்தை அங்கீகரிக்கின்றாரா;

(ii) மேற்படி இடைக்கால குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இலக்கம் 184 தொடக்கம் 275 வரையான மருத்துவர்கள் பதிவு செய்யப்பட்டதன் ஊடாக ஹோமியோபதி சட்டம் மீறப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி நியமனங்களை இரத்துச் செய்வாரா;

(iv) இரத்துச் செய்யும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஹோமியோபதி சட்டத்தின் 20 வது பிரிவின் கீழ் பதிவாளரொருவரை நியமிக்க மருத்துவப் பேரவையொன்றுக்கு மாத்திரம் உரித்தான தத்துவத்தை மீறி அப்போது நிலவிய சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரால் திரு. எம். ஏ. பெரேரா பதிவாளராக நியமிக்கப்பட்டமை சட்டபூர்வமானதா;

(ii) இன்றேல், மேற்படி நியமனத்தை சரிசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6042/ '15

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் இளைஞர் படையணி மற்றும் தொழில் வழிகாட்டல் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக கடந்த வருடம் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் அலுவலகத்தின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பாதியளவு நிறைவடைந்துள்ளது என்பதையும்;

(iii) தற்போதைய அரசினால் மேற்படி கருத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹாரிஸ்பத்துவ பிரதேசத்தின் எதிர்கால சந்ததியினரான பிள்ளைகளின் நலன்கருதி மேலே குறிப்பிட்ட கருத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்கான காரணம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2012,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு, 2014.09.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2012 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டதுமான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.10.10 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*

உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை 2011,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு, 2014.09.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டதுமான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.10.10 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*

உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2012,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு, 2014.08.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2012 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டதுமான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.10.10 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2015 யூன் 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4828/14

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மாத்தறை பொது வைத்தியசாலைக்கு தனது முதலாவது நியமனத்தைப் பெற்ற அதன் தலைமை தாதி உத்தியோகத்தரான திருமதி மல்காந்தி டி சில்வா தற்போது அதே வைத்தியசாலையில் இடமாற்றம் ஏதும் இன்றி 21 வருடங்கள் சேவையாற்றியுள்ளார் என்பதையும்,

(ii) மேற்படி தாதி உத்தியோகத்தர் பல சந்தர்ப்பங்களில் இடமாற்றம் கோரியிருந்தார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச தாதிமார் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இடமாற்றம் வழங்குகின்றபோது அரசினால் கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கை யாது;

(ii) மேலே (அ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இடமாற்றம் கோரியுள்ள போதிலும்கூட, அரச தாதிமார்களுக்கு இடமாற்றம் வழங்கும் கொள்கை திருமதி மல்காந்தி டி சில்வாவுக்கு செல்லுபடியாகாதிருப்பதற்கான காரணம் யாது;

(iii) குறித்த இடமாற்றம் வழங்கும் கொள்கைக்கமைய இவருக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா,

(iv) ஆமெனில், இவருக்கு, இவர் கோருகின்ற இடத்துக்கு இடமாற்றம் வழங்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5224/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் அமைந்துள்ள சேரி வீடுகள் மற்றும் லயன் அறைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மாவட்டத்தில் உள்ள வீடுகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குருணாகல் மாவட்டத்தில் மலசலகூடங்கள் இல்லாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மலசலகூடங்கள் இல்லாத வீடுகளுக்கு மலசலகூடங்களை வழங்கும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5576/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்காக விண்ணப்பித்திருந்த ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011.12.31 ஆம் திகதியாகின்றபோது தொழில்வாய்ப்பற்றிருந்த ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டில் இவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) அதன் கீழ் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5927/ '15

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பதவி ஸ்ரீபுர பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையில், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, தென்னமரவாடி கிராம அலுவலர் பிரிவிலும் அதனை அண்டிய பிரதேசங்களான தொரங்காடு, 2 ஆம் கட்டை, 4ஆம் கட்டை, தோரமரிப்பு, பொரவெவ, குல்லகல்லிய, நேலும்வெவ ஆகிய கிராமங்களிலும் பதவிய திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்டிருந்த பழைய ஆட்சியுரிமை கொண்டிருந்தவர்களுக்கும் புதிய உரிமையாளர்களுக்குமிடையில் காணிப் பிணக்கொன்று உருவாகியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து பழைய ஆட்சியுரிமை கொண்டிருந்தவர்கள் உயிர்ப்பாதுகாப்புக்காக வெளியேறியதன் பின்பு, இக்காணிகளுக்கு அளிப்புப் பத்திரங்களை (LDO) வழங்கி புதிதாக ஒரு குழுவினரை குடியேற்றியவர்கள் யாவர் என்பதையும்;

(ii) இவ்வாறு குடியேறியவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை என்பதையும்;

(iii) வருடாந்த உரிமப்பத்திரத்தின் கீழ் இக்காணிகளில் குடியிருந்த பழைய ஆட்சியுரிமை கொண்டிருந்தோர் யாவர் என்பதையும்;

(iv) இவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி காணிகளுக்கான சட்டபூர்வமான உரிமை, பதவிய திட்டத்தின் கீழிருந்த ஆரம்ப ஆட்சியுரிமை கொண்டவர்களுக்காக இன்றேல் அளிப்புப் பத்திரங்கள் மூலம் பின்பு குடியமர்த்தப்பட்டவர்களுக்கா உள்ளதென்பதையும்;

(ii) இப்பிணக்கைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்னவென்பதையும்;

(iii) இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

6039/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 2015 தயட்ட கிருள வேலைத் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்துக்கான வீடமைப்பு உதவி வேலைத்திட்டத்திற்கு அமைய எஹலியகொட தேர்தல் தொகுதியின் எஹலியகொட, கிரிஎல்ல மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1000 க்கும் அதிகமானவர்களிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பப் பத்திரங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் ஏற்புடைய பொருட்களை வழங்குவதற்கு விலைமனுக்களை அல்லது கேள்விப் பத்திரங்களை கோரும் பணி இரத்தினபுரி மாவட்ட செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி வீடமைப்பு உதவிகளை எதிர்பார்த்துள்ள குறைந்த வருமானம் பெறுநர்கள் மேற்படி உதவித் திட்டத்தை தற்போதைய அரசாங்கம் இரத்துச் செய்துள்ளதா என விசாரிக்கின்றனர் என்பதை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அறிவார்களா என்பதையும்;

(ii) இது தொடர்பாக ஏற்புடைய உத்தியோகத்தர்களிடம் விசாரித்து தகவல்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6046/ ’15

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் அதன் தாபக நம்பிக்கைப் பொறுப்பாளர், வர்த்தக அமைச்சர் என்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) வர்த்தகம் சார்ந்த விடயத்திற்குப் பொறுப்பான தற்போதைய அமைச்சர் யாரென்பதையும்;

(ii) மஹபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் தவிசாளர்கள் யாவரென்பதையும்;

(iii) அந்நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமிப்பவர் யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் கீழ் இயங்கும் வரையறுக்கப்பட்ட நஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் மற்றும் வரையறுக்கப்பட்ட நெற்வேர்த் செக்கியூரிட்டீஸ் நிறுவனங்களின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களை நியமிப்பவர் யாரென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அப்பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் வயது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6064/ ’15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர், மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கில்கள் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்:

(ii) புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அனைத்து அரச ஊழியர்களுக்கும் மோட்டார் சைக்கில்கள் பெற்றுக்கொடுக்கப்படுமென சனாதிபதித் தேர்தலின் போது வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மோட்டார் சைக்கில்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 25,000/- முற்பணம் செலுத்தியுள்ளவர்களுக்கும், மோட்டார் சைக்கில்களுக்காக விண்ணப்பித்துள்ள ஏனைய அனைவருக்கும் மேற்படி மோட்டார் சைக்கில்களை வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மோட்டார் சைக்கில்களை பெற்றுக்கொள்வதற்காக முற்பணம் செலுத்தியுள்ளவர்களுக்கு அப்பணத் தொகையை திருப்பிச் செலுத்துவாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6079/ '15

கௌரவ ரி. பீ. ஏக்கநாயக்க,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் ஆரம்பிக்கப்படுகின்றபோது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்ட நான்கு முறையியல்களுக்கு பதிலாக இரண்டு புதிய முறையியல்களின் கீழ் மேற்படி தெரிவினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்படுகின்றதா என்பதையும்?

(ii) ஆமெனில், இதற்காக வாழ்வின் எழுச்சிச் சட்டம் திருத்தப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி இரண்டு புதிய முறையியல்களின் கீழ் தற்போது புதிய ஊழியர்களாக இணைந்துகொண்டுள்ளவர்களுக்கு 6% ஓய்வூதிய பங்களிப்புத் தொகை எவ்வாறாக அறவிடப்படும் என்பதையும்;

(iv) தற்போது ஆரம்ப சேவைக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக சேவையில் இணைந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியத்தொகையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6091/ '15

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணாயக்காரவினால் மேற்கொள்ளப்பட்ட சில நிதியியல் முறைகேடுகள் காரணமாக அவர் டுபாயில் உள்ள முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சர்வதேச நிலையத்தின் தலைமைப் பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டிருந்தார் என்பதையும்;

(ii) குறிப்பிடப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக, தன்னியக்க சொல்லி இயந்திரங்களைப் பயன்படுத்தி டுபாயில் உள்ள முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவக (PIM) கணக்கிலிருந்து ரூபா 17.3 மில்லியனை மீளப்பெற்றுள்ளமையையும் அத்துடன் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளைச் சமர்ப்பிக்காது ரூபா 5.6 மில்லியனுக்கான ஏழு காசோலைகளை பணமாக மாற்றியமை அல்லது தனது கணக்கில் வைப்பிலிடப்பட்டமையையும் மற்றும் மாணவர்களிடம் இருந்து கிடைத்த தொகைகளுக்கும் வங்கியிலிடப்பட்ட தொகைகளுக்கும் இடையே ரூபா 35.3 மில்லியன் வேறுபாடொன்றை ஏற்படுத்தியமையையும் கோடிட்டுக்காட்டி "ஏன்ஸ்ட் அன்ட் யங் அட்வைசரி சேவிசர்ஸ் (பிரைவெட்) லிமிட்டட்" (Ernst & Young Advisory Services (Pvt.) Ltd.) இனால் ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பேராசிரியர் நாணாயக்கார தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமாக எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார் என்பதையும்;

(ii) (அ)(ii) இல் இடம்பெற்றதைப் போன்ற நடவடிக்கைகள் அவர் தலைமை வகிக்கும் தேசிய கல்வி நிறுவகத்தில் நிகழாது என்பது உறுதி செய்யப்படுகிறதா என்பதையும்;

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6099/ '15

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மில்கோ நிறுவனம் பெற்றுள்ள இலாபம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) 2015ஆம் ஆண்டில் இதுவரை மேற்படி நிறுவனம் பெற்றுள்ள இலாபம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மில்கோ நிறுவனத்தினால் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் பால் லீட்டர்களின் அளவு தேசிய பால் உற்பத்தியில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(ii) எதிர்காலத்தில் தேசிய அளவில் பாலுக்கான தேவையை நிறைவேற்றுகின்றபோது மேற்படி நிறுவனம் வழங்கும் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வது தொடர்பிலான உத்தேச இலக்குகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6101/ '15

கௌரவ கீதாஞ்சன குணவர்த்தன,— நெடுஞ்சாலைகள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு முதலீட்டு ஊக்குவிப்பு வலயமும் அவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் தாபிக்கப்படுவதால் அந்த நகரங்களில் ஏற்படும் வாகனப் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சீதாவக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவிசாவளை நகரில் வாகனப் போக்குவரத்து நெரிசல் அதிகரித்ததென்பதையும்;

(ii) மேற்படி முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளிச்செல்லும் வாகனங்களில் சுமார் 40% அவிசாவளை நகரின் ஊடாக கேகாலை நகரை நோக்கிச் செல்கின்றதென்பதையும்;

(iii) மேற்படி வாகனப் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக கைத்தொழில் பேட்டைக்கு அருகாமையிலிருந்து கேகாலை மாவட்டத்தின் தல்தூவை நோக்கியதாக சீதாவக்க கங்கைக்கு குறுக்காக புதியதொரு பாலத்தை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) பிரித்தானிய இரும்புப் பாலங்கள் கருத்திட்டத்தின் கீழ் மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4998/ '14

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 2006 ஆம் ஆண்டில் நடைபெற்றதன் பின்னர் மீண்டும் 2012 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டது என்பதையும்;

(ii) ஆதலால், பரீட்சைக்கு தோற்றக்கூடிய உச்ச வயதெல்லையான 28 வயது வரையறை பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள தகைமைகளை பூர்த்தி செய்த ஒரு குழுவினர் உள்ளனர் என்பதையும்,

(iii) கூடியபட்சம் இரண்டு முறை தோற்றக்கூடிய பரீட்சைக்கு வயதெல்லை தொடர்பான பிரச்சினை காரணமாக சிலர் ஒரு தடவை மாத்திரம் தோற்றியுள்ளதுடன், சிலருக்கு ஒரு தடவைகூட தோற்றமுடியவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேலே (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள தகுதிகளைப் பெற்றவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2014.02.28 ஆந் திகதியளவில் அரச துறை நிறுவனங்களில் நிலவிய இலங்கை கணக்காளர் சேவையின் IIIஆம் தரத்திற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2012 ஆம் ஆண்டில் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைவதற்கான உரிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில், அத்திகதி யாது,

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5580/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) ஆயுர்வேத மருத்துவர்கள் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள சேவைப் பிரமாணக்குறிப்பு தயாரிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பு இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(iii) இது திருத்தியமைக்கப்படவில்லை எனின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5928/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின், புல்மோட்டையில் அமைந்துள்ள, அசிரிமலே ஆசிரிகந்த புராதன ரஜமஹா விஹாரைக்குச் சொந்தமான காணிகள் உட்பட புனிதமான ஆதனங்கள் பல்வேறு இனத்தவர்களின் அத்துமீறிய பிடியில் சிக்கியுள்ளதால் மேற்படி விஹாரைக்குச் சொந்தமான காணிகளை பழைய எல்லை நிர்ணையிப்புகளுக்கேற்ப நில அளவை செய்து சட்ட ரீதியாக ஒதுக்கிக் கொடுக்கும் திகதி யாதென்பதையும்;

(ii) எத்தா நெகி கந்த விஹாரை, யான்ஓய ரஜமஹா விஹாரை, நாகலென ரஜமஹா விஹாரை மற்றும் வேறு புராதன விஹரைகளும் அத்துமீறி குடியிருப்பவர்களினதும் பௌத்த உரிமைகளை அழிக்கின்றவர்களினதும் பிடியில் சிக்கியுள்ளதால் மேற்படி விஹாரைகளுக்குச் சொந்தமான காணிகளின் நில அளவைப் பணிகளை மேற்கொண்டு ஒதுக்கிக் கொடுக்கும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி விஹாரைகளுக்குச் சொந்தமான காணிகள் என்பதை அறியாமல் அக்காணிகளில் குடியிருக்கின்ற குடும்பங்களுக்கு வேறு பிரசேத்திலிருந்து காணிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விஹாரைக்கும் சொந்தமான காணிகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குடியிருப்பவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6066/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மூத்த பிரசைகளின் கணக்குகளில் ரூபா 25 இலட்சம் வரையிலான வைப்புகளுக்கு 15% வட்டியை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டதென்பதை அவர் அறிவாரா என்பதையும்?

(ii) மேற்படி பிரேரணை தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) அதற்கேதுவாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரச வங்கிகளால் மூத்த பிரசைகளின் ரூபா 10 இலட்சத்திற்கு அதிகமான வைப்புளுக்கு மேற்படி 15% வட்டி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவு காரணமாக மூத்த பிரசைகளுக்கு அவர்களின் பெயரில் ரூபா 10 இலட்சத்தை விட அதிகமாக வைப்புகளை பேணிவருவதற்கு இடமளிக்கப்படுவதில்லையென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2015 யூன் 25, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

5449/ '14

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொன்றுதொட்டு இருந்துவருகின்ற உள்நாட்டு நெல்லினங்களை பயிரிடுவதற்காக விவசாய இரசாயனப் பொருட்கள் அவசியமாகாது என்பதையும்;

(ii) உள்நாட்டுப் பண்டைய நெல்லினங்களை பயிரிடுகையில் ஆகக்குறைந்த அளவு நீர் அவசியமாவதோடு பாரம்பரிய வழிமுறைகளைக் கையாள்வதால் சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் ஏற்படுகின்ற சேதம் குறைவானதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில் இனங்காணப்பட்டுள்ள இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பண்டைய நெல்லினங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நெல்லினங்களின் பெயர்கள் யாவை;

(iii) தற்போது பயிரிடப்படுகின்ற பண்டைய நெல்லினங்கள் யாவை;

(iv) ஏனைய பண்டைய நெல்லினங்கள் பயிரிடப்படாமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2014 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு பண்டைய நெல்லினங்களை விதை நெல்லாகப் பயன்படுத்தி பயிரிடப்படுகின்ற வயல்களின் ஏக்கரளவு யாது;

(ii) இலங்கை பூராவிலும் அத்தகைய விதைநெல்லை பரவச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில் அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5581/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போதைய ஆயுர்வேத மருத்துவ ஆணையாளரின் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அலுவலருக்கு ஆயுர்வேத மருத்துவவியல் தொடர்பாக உள்ள தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரியொருவர் சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சில் அடைந்துகொள்ள முடியுமான உயர் தொழில்சார் பதவி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5929/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) திருகோணமலை – கொட்பே கடற்றொழில் துறைமுகத்தில் அமைந்துள்ள பெருமளவு வருமானத்தை ஈட்டக்கூடிய சிற்றுண்டிச்சாலை மிகக் குறைந்ததொரு தொகைக்கு வழங்கப்பட்டமையினால் அரசிற்கு கிடைக்கவேண்டியிருந்த உண்மையான வருமானம் இழக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் யாதென்பதையும்;

(ii) 2015.03.05 ஆம் திகதி மேற்படி கேள்விப்பத்திரம் பெறுனருக்கும் இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனத்திற்குமிடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஊடாக மேற்படி சிற்றுண்டிச்சாலையின் மாதாந்த வாடகை ரூபா 10,000 வரை குறைக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கேள்விப்பத்திரம் பெறுனர் கடந்த காலத்தில் தொடர்ச்சியாகவே உரிய குத்தகைப் பணத்தை செலுத்தாமல் மேற்படி சிற்றுண்டிச்சாலையை நிருவகித்துள்ளாரென குற்றம் சாட்டப்பட்டிருந்தும் அரசு பெருந்தொகையான பணத் தொகையை இழக்கும் வகையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி சிற்றுண்டிச்சாலை தொடர்பில் பகிரங்க விலை மனுக்கோரல் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) எதிர்வரும் காலத்தில் அதற்கேற்புடையவாறு பகிரங்க விலை மனுக்கோரல் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6067/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் 2014 நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 2500/- கொடுப்பனவொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழியப் பட்டிருந்ததா என்பதையும்;

(ii) தற்போதைய அரசாங்கத்தின் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 2015 இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 250 கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழியப்பட்டதா என்பதையும்;

(iii) தற்போது மேற்படி இரண்டு முன்மொழிவுகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா, இன்றேல் ஒரு முன்மொழிவு மட்டும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6080/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உரிய கேள்விப்பத்திர நடைமுறையினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் பொருட்டு மூலதனப் பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், இற்றைவரை மேற்படி பொருள் வழங்குனர்களுக்கு பணம் செலுத்தப்படவில்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பணம் செலுத்தப்படுதல் தாமதம் அடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பணம் செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

6102/ '15

கௌரவ கீத்தாஞ்சன குணவர்தன,— நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீத்தாவக்க பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஹங்வெல்ல வாரச் சந்தையின் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்காக முன்னர் இயங்கிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக ரூபா 65 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் தயாரிக்கப்பட்ட ஹங்வெல்ல நகர அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக மேற்படி வாரச் சந்தையின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்காக இனம் காணப்பட்டுள்ள அயலிலுள்ள காணியை சுவீகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹங்வெல்ல நகர மத்தியில் உள்ள பஸ் தரிப்பு நிலையம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள நிலப்பரப்புக்கான புதிய அபிவிருத்தித் திட்டமொன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி புதிய அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5450/ '14

கௌரவ புத்திக பதிரண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்புப் பெட்டகச் சேவையை வழங்கும், இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி நிறுவனங்கள் எவை என்பதையும்;

(ii) நிதி நிறுவனமொன்று பாதுகாப்புப் பெட்டகச் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமா என்பதையும்;

(iii) ஆமெனில், இவ் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு நிதி நிறுவனம் நிறைவுசெய்ய வேண்டிய தகைமைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாதுகாப்புப் பெட்டகங்கள் தொடர்பில் இச்சேவையைப் பேணிவரும் நிதி நிறுவனத்துக்குள்ள பொறுப்புக்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பெட்டகம் ஒன்றிலுள்ள பொருட்கள் காணாமற்போவது தொடர்பில் நிதி நிறுவனமொன்றுக்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சில நிதி நிறுவனங்களில் பாதுகாப்புப் பெட்டக சேவை தொடர்பில் முறைசார்ந்த பாதுகாப்பு இல்லையென்பதையும்;

(ii) பெட்டகங்களில் வைப்புச் செய்த பெறுமதியான பொருட்கள் காணாமற்போவது தொடர்பாக இந்நிதி நிறுவனங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்பதையும்;

(iii) இதன் காரணத்தினால் இச்சேவை பெறுநர்களின் பொருட்கள் இடர்காண் நிலைமைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) (i) பாதுகாப்புப் பெட்டகச் சேவையை முறை சார்ந்ததாக ஆக்குவதற்கு அரசு தலையீடு செய்யுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு; எப்போது முதல் மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5945/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DODD/HO/2/Admin/நியமனங்கள் ஆம் இலக்க, 2015.02.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திரு. யூ. அநுர எஸ். வீரரத்ன (இலங்கைத் திட்டமிடல் சேவையின் I) திருகோணமலை மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) பின்னர் குறித்த திணைக்களத்தின் பணிப்பாளரின் (நிருவாகம்) DODD/HO/2/Admin/நியமனங்கள் ஆம் இலக்க, 2015.02.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மேற்படி நியமனம் மீண்டும் திருத்தப்பட்டு இவர் அத்திணைக்களத்தின் தலைமையகத்தில், பணிப்பாளர் (சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள்) எனும் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. வீரரத்னவுக்கு மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவியைப் பெற்றுக்கொடுக்காதிருப்பதற்கு திருகோணமலை மாவட்ட செயலாளரினதும் சமுர்த்தி விடயத்துடன் தொடர்புபடாத அமைச்சர் ஒருவரினதும் அரசியல் தலையீடு நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அத்தகைய தலையீடு நடைபெற்றிருப்பின், அதனை அங்கீகரிக்கின்றாரா என்பதையும்;

(iii) திருகோணமலை மாவட்டத்தினுள் சமுர்த்தி விடயத்திற்குரிய நடவடிக்கைகள் காணி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) திருகோணமலை மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் பதவிக்கு திரு. யூ. அநுர எஸ். வீரரத்னவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6083/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— நெடுஞ்சாலைகள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களுக்கு 2015 இடைக்கால வரவு செலவு திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6086/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின், திஹகொட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின், நாதுகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மஹஹேன/ மடிகெவத்த காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சுவீகரிப்பு மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி காணி என்ன நடவடிக்கைக்காக சுவீகரிக்கப்பட்டதென்பதையும்;

(iv) சுவீகரிக்கப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்;

(v) மேற்படி காணியின் சட்டரீதியான உரிமையாளரான திரு. ஜினதாஸ குமாநாயக்கவிற்கு காணி சுவீகரிப்பு தொடர்பில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5722/ '14

கௌரவ புத்திக பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அகுரெஸ்ஸ, ஹுலன்தாவ தோட்டத்தைச் சார்ந்து வாழ்கின்ற மக்களுக்கு ஆகக்குறைந்த அடிப்படை வசதிகள் கூட இல்லை என்பதையும்;

(ii) இதன் காரணத்தினால் இம்மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹுலன்தாவ தோட்டத்தைச் சார்ந்து வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான குடிநீர், வீதி வசதிகள், வீடமைப்பு மற்றும் சுகாதார வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

(iii) இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) இதற்கென செலவுசெய்ய எதிர்பார்க்கப்படும் பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6084/ ' 15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "ஒரு கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 25% உழைப்புப் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கான விதப்புரைக்கமைய அத்தகைய உழைப்புப் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது எவ்வாறு என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கான அடிப்படைச் செலவினங்களை ஏற்பதற்கான முறையொன்றை முன்மொழிவாரா என்பதையும்;

(iii) 25 % உழைப்புப் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியாத திட்டங்கள் இருப்பின், அவற்றை நடைமுறைப்படுத்துவது எவ்வாறு என்பதையும்;

(iv) இவ்வாறான சந்தர்ப்பங்களில் உழைப்புப் பங்களிப்பை 5% வரை குறைப்பதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6087/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹபராதுவ, கட்டுகுருந்த, மீபே வீதி எனும் முகவரியில் வசிக்கும் நுவன் ஜயலத் சமரசேகர, ஹல்தும்முள்ள, சொரமுனை "ஜயரத்ன" விலாசத்தில் வசிக்கும் சத்துரங்க வெலிகும்புர மற்றும் கம்பஹ, இந்திகொல்ல, பண்டாரநாயக்கபுர 2ஆவது ஒழுங்கை, இல.93, ஏ 25 எனும் முகவரியில் வசிக்கும் டபிள்யு. பியும் சிந்தக குலரத்ன ஆகிய மூவரும் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஈரானில் வைத்து கைது செய்யப்பட்டு, தற்போது ஒரு வருடத்துக்கும் மேலாக அந்நாட்டில் சிறையிலடைக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி மூவரையும் இலங்கைக்கு அழைத்துவருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளரது (கொன்சியூலர்) FA/cons/cs/iran/13/02 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், ஈரானிய சட்டங்களை மீறி நாட்டினுள் பிரவேசித்தமை மற்றும் பொருட்களைத் திருடியமை காரணமாக மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மூவருக்கும் ஈரானிய ரியால் 5000,000 மற்றும் 10,490,834,000 தொகை தண்டப் பணம் சகிதம் இரண்டு வருட சிறைத் தண்டணை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்களை இந்நாட்டுக்கு அழைத்துவருவதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் தலையீடு செய்ய முடியுமா;

(ii) இன்றேல், இது தொடர்பில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 யூன் 26, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5451/ '14

கௌரவ புத்திக பதிரண,— மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஆறுகளைச் சார்ந்ததாக அனுமதியற்ற மணல் அகழ்ந்தெடுத்தல், இரத்தினக்கல் அகழ்வு மற்றும் தங்க அகழ்வு நடைபெறுகின்றதென்பதையும்;

(ii) இதனால் ஆறுகளுக்கு பாரியளவில் சேதமேற்படுகின்றதென்பதையும்;

(iii) இது மக்கள் வாழ்க்கையிலும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதையும்;

(iv) ஏற்புடைய நிறுவனங்களில் மேற்படி முறையற்ற செயற்பாடுகளைத் தடுக்க போதியளவு வசதிகள் இல்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆறுகளைச் சார்ந்ததாக இடம்பெறுகின்ற குறிப்பிட்ட முறையற்ற செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில் அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) 2013.01.01 ஆந் தேதியிலிருந்து 2014.06.30 ஆந் தேதி வரை (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட தவறுகள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(iv) அவை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் ஒவ்வொரு முறைப்பாட்டுக்கிணங்க வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி சுற்றாடல் சேதங்களைத் தடுக்க தற்போது நிலவுகின்ற சட்டமுறைமை போதுமானதாக உள்ளதா;

(ii) இன்றேல், நிலவுகின்ற சட்டங்களை மாற்றியமைக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6030/ '15

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகாவலி 'சீ ' வலயத்திற்குரிய அல்ல - கந்தளாய்த் திட்டத்தின் கீழ் கமத்தொழில் நடவடிக்கைகளுக்கென விவசாய சங்கங்களினூடாக தற்காலிக தொழிலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டவாறு தற்காலிக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர், முகவரி, மற்றும் சேவைக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) சுமார் 8 வருட காலமாக தற்காலிகத் தொழிலாளராகப் பணிபுரிந்துள்ள அல்ல வீதி, சூரிய புர, கந்தளாயில் வசிக்கும் திருமதி எஸ்.எம். அபே மெனிக்கேயின் தொழில் கடந்த சனவரி மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னரான காலத்தில் மேலே குறிப்பிட்டவாறு தொழில் இழக்கச் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) இவர்களின் பெயர், முகவரி, மற்றும் பணியாற்றிய மகாவலி வலயம் ஆகியவை யாவையென்பதையும்;

(vi) மேலே குறிப்பிட்டவாறு தொழில்களை இழந்த குழுவிற்கு தொழில்களைப் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

(vii) அது எத்திகதியில் என்பதையும்;

(viii)இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

6068/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்துரட்ட பெருந்தோட்டக் கம்பனி 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதொரு கம்பனியா என்பதையும்;

(ii) அந்தக் கம்பனியின் பங்குகள் அதன் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான பங்குரிமைச் சான்றிதழ்கள் தற்போது அந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறான பங்கிலாபங்கள் அல்லது வேறு ஏதேனும் நலன்களைப் பெறாத பங்குதாரர்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6085/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டு கிராமிய அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்தப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) 2014.12.31 ஆம் திகதிக்கு வேலைகள் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் 2014.12.31 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு நிதி வழங்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவுகளைத் தாமதமடையச் செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

6098/ '15

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— உள்ளக போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரதத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மரபு முறைக்கமைய, புகையிரதப் பொது முகாமையாளராக சிரேஷ்ட பொறியியலாளரே நியமிக்கப்படுவார் என்பதையும்;

(ii) அந்த மரபு முறைக்கமைய நியமிக்கப்பட்டிருந்த பதில் புகையிரதப் பொது முகாமையாளர் நீக்கப்பட்டு 2014.10.16 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம், சேவை மூப்பில் 09 வது இடத்திலுள்ள ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அதன்படி நியமனம் பெற்றுள்ள தற்போதைய பதில் புகையிரதப் பொது முகாமையாளர் மாத்தறை - கதிர்காமம் புகையிரதப் பாதையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளராக செயலாற்றினார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே அ(ii) இல் குறிப்பிடப்பட்டவாறு தகைமைகளைப் பூர்த்திசெய்திருந்த பதில் புகையிரதப் பொது முகாமையாளரை அந்தப் பதவியிலிருந்து நீக்கியமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) அவ்வாறு நீக்கியதில் ஏதேனும் அநீதி அல்லது முறைகேடு ஏற்பட்டிருப்பின் அதனை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6103/ '15

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புரநெகும கருத்திட்டத்தின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் பெறுமதி மற்றும் மேற்படி கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ள திகதி தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) புரநெகும கருத்திட்டமொன்றாக கொழும்பு மாவட்டத்தின் அவிசாவளை தேர்தல் தொகுதியின் சீதாவக்க பிரதேச சபையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற பிலிப் குணவர்த்தன ஞாபகார்த்த நூலகக் கட்டடத் தொகுதியின் நிர்மாணிப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6104/ ' 15

கௌரவ எச்.ஆர். மித்ரபால,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் அரசாங்க ஊழியர் ஒருவருக்கு ரூபா 10,000 சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி பிரேரணையை சமர்ப்பித்தது கௌரவ ரணில் விக்கிரமசிங்கவா அல்லது, சனாதிபதி வேட்பாளர் ஒருவரான கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்களா என்பதையும்;

(iii) இன்றேல், அதனைச் சமர்ப்பித்தவர் யார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 100 நாள் வேலைத்திட்டத்தின் காலஎல்லை தற்போது நிறைவடைந்துள்ள போதிலும், மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுக்கு அமைய இதுவரை வழங்கப்பட்டிருப்பது ரூபா 5000 மாத்திரமே என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) சம்பள அதிகரிப்பு தொடர்பான எஞ்சிய ரூபா 5000 ஐ யூன் மாதத்தில் பெற்றுக் கொடுக்க முடியுமா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கு மேலும் காலஅவகாசம் அவசியமாயின், அது எத்திகதி வரை என்பதையும்;

(iii) எஞ்சிய ரூபா 5000 மற்றும் சகல கொடுப்பனவுகளும் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படுமாயின், அத்திகதி யாது என்பதையும்;

(iv) அதற்கமைய நிலுவைச் சம்பளம் மற்றும் எஞ்சிய சம்பளம் செலுத்தப்படும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அரசாங்கம் சம்பளம் செலுத்துவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து கடன் தொகையொன்றை பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5454/ ’14

கௌரவ புத்திக பதிரண,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு சொந்தமாகவுள்ள முன்னேற்றமடையாத தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம் துல்லியமான வானிலை முன்னறிவிப்புகளை பெற்றுக்கொடுக்க தவறியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு முன்னேற்றகரமான மனித மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படும் நவீன உபகரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நவீன உபகரணங்கள் எத்தகைய பணிகளுக்காக பயன்படுத்தப்படும் என்பதையும்;

(iv) மேற்படி உபகரணங்களுக்காக செலவிடப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) நவீன தொழில்நுட்ப உபகரணங்களை பெற்றுக்கொடுக்கும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6032/ ’15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யான்ஓயா நீர்ப்பாசன கருத்திட்டத்தை செயற்படுத்துகின்றபோது கோமரங்கடவல பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய, 232 ஏ, பம்புருகஸ்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கின்ற 176 குடும்பங்களை அகற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மக்களுக்கு புதிதாக காணி வழங்குகின்ற போது, இவர்கள் யுத்த காலத்தில் பாதுகாப்புப் படையினருக்கு நல்கிய ஒத்துழைப்பிற்காக தனித்துவமாகக் கவனிப்பதற்கும், இவர்களது ஆரம்ப வதிவிடங்களுக்கு அண்மித்துள்ள பிரதேசங்களிலிருந்து காணிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இவர்கள் தற்போதுகூட பயிர்ச் செய்கையை மேற்கொள்கின்ற வயல் காணிகளில் யான்ஓயா புதிய நீர்த்தேக்கத்தில் மூழ்காத வயல் காணிகளை இவர்களுக்கே பெற்றுக்கொடுப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் புல்மோட்டை வரை நிர்மாணிக்கப்படுகின்ற அணைக்கட்டின் வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள புதர்க் காடுகளைக் கொண்டுள்ள நிலப்பரப்பிலிருந்து இவர்களுக்குத் தேவையான மேட்டுநிலக் காணிகளை பெற்றுக்கொடுப்பாரா என்பதையும்;

(iv) பயங்கரவாத அச்சுறுத்தல்கள் நிலவிய காலத்தில் 5-6 ஏக்கர் பரப்பளவில் பயிர்செய்கையை மேற்கொண்ட மேற்படி மக்களுக்கு தற்போது வழங்குவதற்கு உத்தேசமாயுள்ள மேட்டுநிலக் காணி ½ ஏக்கர் மற்றும் வயல் காணி 11/2 ஏக்கர்களுக்கு பதிலாக மேட்டுநிலக் காணி 1 ஏக்கரையும் வயல்காணி 2 ஏக்கர்களையும் பெற்றுக்கொடுப்பதை அங்கீகரிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6088/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 / 2015 பெரும்போகத்தில் நெற் செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு விதை நெல் நிவாரணம் வழங்கப்படுமென 2015 வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக பிரேரிக்கப்பட்டதன் பிரகாரம், மேற்படி நிவாரணத் தொகை தற்போது செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) பதுளை மாவட்ட நெற் செய்கையாளர்களுக்கு மேற்படி நிவாரணத் தொகையை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடு 2014/11/21 ஆம் திகதியளவில் கிடைக்கப்பெற்றிருந்ததா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி விவசாயிகளுக்கு மேற்குறிப்பிட்ட நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படுவதை தாமதிப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) பதுளை மாவட்ட நெற் செய்கையாளர்களுக்கு மேலதிகமாக அனைத்து நெற் செய்கையாளர்களுக்கும் தாமதமின்றி விதை நெல் நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6100/ '15

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி 2013 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அடைந்துள்ள நட்டம் வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) 2011 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மேற்படி நிறுவனத்திற்கு பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்டுள்ள பணத்தொகை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் தற்போதைய நிதி நிலைமை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5459/ '14

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (I) இலங்கையின் பொலிஸ் நிலையங்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட யமஹா XJ6 தொகுதியிலான மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(II) அதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(III) மேற்படி மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (I) ஒரு மோட்டார் சைக்கிளின் விலையைத் தீர்மானிக்கும்போது ஏற்புடையதாகின்ற மோட்டார் சைக்கிளின் அடிப்படை விலை, கப்பற் கட்டணங்கள், அரசாங்க வரிகள், ஏனைய செலவினங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(II) மேற்படி வகையிலான மோட்டார் சைக்கிள்களை இலங்கையின் சாதாரண வாகனச் சந்தையில் கொள்வனவு செய்வதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

(III) ஆமெனில், மேற்படி மோட்டார் சைக்கிளின் விலை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6089/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு மொழிபெயர்ப்பாளர்கள் இறுதியாக ஆட்சேர்க்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆட்சேர்ப்புக்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு யாது என்பதையும்;

(iii) மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு புதிய சேவைப் பிரமாணக் குறிப்பொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அவ்வாறானதொன்றை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் பதவிகளுக்குத் தேவையான தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு அண்மித்த தகைமையாக அனுபவம் அல்லது குறித்த துறையில் கல்விபயின்றுள்ள டிப்ளோமா சான்றிதழ் தகைமையாக அங்கீகரிக்கப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற மொழிபெயர்ப்பு முறைகள் மற்றும் உரைப்பெயர்ப்புத் திறமைகள் பற்றிய டிப்ளோமா பாடநெறியை மொழிபெயர்ப்புத் தகைமையொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், 2013 (2014) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மேற்படி தகைமை அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?